FWC

**வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016
## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | இந்து சமயம் |
|---|---|---|

### இந்து சமயம் – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | **1** | 11) | **2** | 21) | **1** | 31) | **5** | 41) | **2** |
| 02) | **5** | 12) | **4** | 22) | **2** | 32) | **5** | 42) | **2** |
| 03) | **5** | 13) | **3** | 23) | **2** | 33) | **4** | 43) | **5** |
| 04) | **4** | 14) | **1** | 24) | **3** | 34) | **1** | 44) | **4** |
| 05) | **5** | 15) | **2** | 25) | **4** | 35) | **3** | 45) | **1** |
| 06) | **5** | 16) | **4** | 26) | **3** | 36) | **2** | 46) | **1** |
| 07) | **4** | 17) | **2** | 27) | **2** | 37) | **3** | 47) | **2** |
| 08) | **4** | 18) | **5** | 28) | **2** | 38) | **1** | 48) | **2** |
| 09) | **5** | 19) | **3** | 29) | **4** | 39) | **3** | 49) | **3** |
| 10) | **5** | 20) | **5** | 30) | **4** | 40) | **5** | 50) | **2** |

($50 \times 2 = 100$ புள்ளிகள்)

### இந்து சமயம் – II

#### பகுதி I

01)

(i) பிரமம் சகுணப் பிரமம் நிங்குண பிரமம்
ஆன்மாவின் 5 கவசம், பரமாத்மா, ஜீவாத்மா பற்றிய விளக்கம்
பிரமம், ஆன்மா இரண்டிற்குமான தொடர்பு பற்றிய விளக்கம்
பிரபஞ்சம் பற்றி தத்துவக் கருத்துக்கள் பற்றிய விளக்கம் (5 புள்ளிகள்)

(ii) உண்மை பேசுதல்
அறம் செய்
தந்தை தாய் போற்று
குருலைத் தெய்வமாகப் போற்று
அன்னத்தைப் பழியாதே
உபநிடத மகாவாக்கியங்களும் பிற்கால இந்து தத்துவங்களும் இந்தியத் தத்துவ கோட்பாடுகள் அனைத்திற்கும் மூலம், அத்வைத கோட்பாட்டின் பிறப்பு, வேதாந்தக் கோட்பாடுகள், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தோற்றம் பெறல். (5 புள்ளிகள்)

(iii) உபநிடதம் ஆராயும் பிரமம் உண்மைப் பொருளான இறைவன் ஆகும். பிரமம் எனும் சொல் பிரஹா எனும் வினையடில் இருந்து தோன்றியதாகும். 'பிரஹா' என்பது தோன்றுதல் / வளர்தல் எனப் பொருள்படும்.
பிரமத்தின் இயல்புகள் பற்றி உபநிடதங்கள் கூறியவற்றைக் குறிப்பிடப்பட்டு உபநிடதங்கள் கூறியுள்ள உதாரணங்களின் ஊடாக விளக்கம் அளித்தல் (10 புள்ளிகள்)

($5 + 5 + 10 = 20$ புள்ளிகள்)

02) சாக்தம் :- சிந்துவெளியில் பெண் தெய்வம், இருக்குவேதம் - உணவு, ராத்திரி, சுவேதாஸ்வர உபநிடதம், சக்தி தத்துவம், புராணம், தேவி பாகவதம், தேவி விரதம், சாக்த தந்திரம், காயத்திரி கவசம், சக்தியின் பெயர்கள், மந்திர, தந்திர, யந்திர பாவனையும் வழிபாட்டு முறைகளும, சகஸ்ரநாமம் வழிபாட்டு முறைகள், சக்தி ஆலயங்கள், வழிபாடுகள் பற்றிய விளக்கம், ஆகமம் சார் சாராத வழிபாட்டு முறைகள் பற்றிய விளக்கம் (20 புள்ளிகள்)

03)

(i) கி. பி. 4ம் - 5ம் நூற்றாண்டு (3 புள்ளிகள்)

(ii) ஆகமங்களின் 9 பிரிவு தந்திரம் எனப்படும்
9 பிரிவுப் பாடலின் தொகையும் கூறப்படல் வேண்டும்.
ஒவ்வொரு தந்திரங்களும் விளக்கப்படல் உ+ம்: முதலாந் தந்திரம் - காரணகமந்திர சாரம்
(3 புள்ளிகள்)

(iii) ஆகமங்களின் சாரமாய் அமைதல்
சைவ சித்தாந்தக் கருத்து பரவலாய் நிறைந்து இருத்தல்
யோக நெறியை விளக்கல்
மந்திரோபாசனை மூலம் சக்தி தத்துவத்தை விளக்கி அம்மை வழிபாட்டுக்கு உதவுதல்
வேதாந்த தரிசனம், சைவசித்தாந்தப் பிரிவுகளை விளக்கல்
சைவ சித்தாந்தத்தின் வரலாற்றுக் களஞ்சியம் (7 புள்ளிகள்)

(iv) 10ம் திருமுறையான திருமந்திரம் பாடியமை
ஞானநெறி வர உதவியமை
அடியார் பெருமை வளர உதவியமை
சிவாகம சிறப்பிற்கு உதவியமை
யோக மார்க்கம் வளர உதவியமை
சைவ சித்தாந்தக் கருத்துக்கு அடிப்படையாக அமைந்தமை. (7 புள்ளிகள்)
$(3 + 3 + 7 + 7 = 20$ புள்ளிகள்)

## பகுதி II

04)

(i) சொல் விளக்கம் - இறங்கி வருதல்
பொருள் விளக்கம் - அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காக்க
இறைவன் இறங்கி வருதல்
வைணவத்திற்கே சிறப்பாக உரியது
உயிர்களின் உயர்வுக்காக இறைவன் அவதாரம் எடுப்பார் (3 புள்ளிகள்)

(ii) கீதை தரும் விளக்கம்
நல்லவரைக் காத்தல், அறத்தை நிலை நிறுத்தல்
தீயவரைக் கண்டித்தல், உலகை நலமடையச் செய்தல்
“அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட நான் யுகம் தோறும் அவதாரம் எடுப்பேன்”
விஸ்ணுவை நம்பி பிரபக்தி நிலையில் வாழும் ஆன்மாக்களை பாதுகாப்பதற்காக அவதாரம் எடுக்கப்படுகின்றது.
இதுவரை எடுக்கப்பட்ட அவதாரம் - 9 இனி எடுக்க இருப்பது - 1
புராண இதிகாசங்களில் அவதாரக் கோட்பாடு பற்றி உண்டு
இராமகிருஸ்ண அவதாரங்கள் எல்லோராலும் போற்றப்படல்
அரசர்களும் திருமாலின் அவதாரமாக உருவகிக்கப்படல் (3 புள்ளிகள்)

(iii) 10 வகைகள் உள்ளன

- ✶ மத்தய அவதாரம்
- ✶ கூர்ம அவதாரம்
- ✶ வராக அவதாரம்
- ✶ நரசிங்க அவதாரம்
- ✶ வாமன அவதாரம்
- ✶ பரசுராம அவதாரம்
- ✶ இராம அவதாரம்
- ✶ கிருஸ்ண அவதாரம்
- ✶ பலராம அவதாரம்
- ✶ கல்கி அவதாரம்

(7 புள்ளிகள்)

(iv) ✶ ஸ்ரீமகாதேவி பாகவதம் 26 அவதாரங்களைக் கூறும் விஸ்ணுபுராணத்தில் 24 அவதாரம் கூறப்படல்.

✶ ஆழ்வார் பாடல்களில் 1 மச்ச அவதாரம் பற்றிப் பாடல்

✶ மச்ச வடிவில் மறைகளை மீட்ட திருமால் அன்ன வடிவாய் அமைந்த மறைகளைப் பிரமனுக்கு உபதேசித்ததை ஆழ்வார் பாடியுள்ளார்.

✶ வராக அவதாரம் பற்றி திருமங்கை ஆழ்வார் பாடியுள்ளார்.

✶ இராம அவதாரம் பற்றி குலசேகர ஆழ்வார் பாடியுள்ளார்.

✶ கிருஸ்ண அவதாரம் பற்றி பெரியாழ்வார் பாடியுள்ளார். (7 புள்ளிகள்)

$(3 + 3 + 7 + 7 = 20$ புள்ளிகள்)

05) நாயன்மார்கள் வாழ்ந்த சூழ்நிலை

சமயத் தலைமை, சமய வாழ்வை நெறிப்படுத்தல், திருக்கோயில் வழிபாட்டுச் சிறப்பைப் போற்றியமை, பக்தி நெறிக்கு ஊக்கமளித்தமை.

இசை திருப்பதிகம் மூலம் திட்டமிட்ட பிரசாரம்

4 வகை நெறியில் வாழ்ந்தமை

ஆலய சேவை, சிவசின்னச் சிறப்பு

தேவாரப் பாராயணம், சிவனடியார் வழிபாடு, சிவாலய வழிபாடு (20 புள்ளிகள்)

06)

(i) ஆலயம் - ஆன்மா லயப்படும் இடம் ஆலயமாகும்.
கோயில் - கோ + இல், கோ + பதி எனவும் இல் என்பது இடம் எனவும் பொருள்படும். ஆகவே ஆன்மாக்களின் தலைவன் வீற்றிருக்கும் இடம் கோயிலாகும். (4 புள்ளிகள்)

(ii) ✶ பொலநறுவையின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது.

✶ சோழர்காலத்தில் கட்டப்பட்டது.

✶ வானவன் மாதேவி ஈச்சரம் என அழைக்கப்பட்டது.

✶ கற்பகிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம் நந்தி பீடங்கள் என்பன காணப்படுகின்றது.

✶ மதில் 96 அடி நீளமும் 84 அடி அகலமும் கொண்டது.

✶ கற்றளி அமைவு - கருங்கல் மற்றும் சுண்ணக்கல் என்பவற்றினால் ஆனது (6 புள்ளிகள்)

(iii) ✶ ஆதிகாலத்தில் கேதுவால் பூசிக்கப்பெற்ற தலமாகும்.

✶ இராவணனின் மனைவி மண்டோதரி வழிபட்டார் என தெட்சிண கைலாய புராணம் கூறுகின்றது.

✶ இத்தலம் விஜயனின் காலத்தின் பழமையானதாகக் கூறப்படுகின்றது.

✶ இத்தலத்தின் மீது சைவர்கள் மட்டுமன்றி வைணவர்களும் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

✶ இத்தலத்தில் பஞ்சரதப் பவணி இடம்பெறுகின்றது. (10 புள்ளிகள்)

$(4 + 6 + 10 = 20$ புள்ளிகள்)

07)

(i) ✶ ஆறுமுகநாவலர்

✶ சி. த. மு. பசுபதிச் செட்டியார்

✶ சேர். பொன். இராமநாதன்

✶ இந்துபோர்ட் சு. இராசரத்தினம் (5 புள்ளிகள்)

(ii) ✶ சைவபரிபாலன சபையின் ஆரம்பகால உறுப்பினர் ஆவார்.

✶ குருகுல வகுப்பை ஆரம்பித்து நடத்தியமை

✶ யாழ். இந்துக் கல்லூரியை ஆரம்பித்து நடாத்தியமை

**திருக்கேதீஸ்வர ஆலயப் பணிகள்**

- ✶ திருக்கேதீஸ்வரக் காணியை அரசிடம் இருந்து பெறுவதில் பெரும் பங்காற்றினார்.
- ✶ புராதன ஆலய அமைப்பைத் தேடுவதில் ஆர்வம் காட்டி உழைத்தார்.
- ✶ பழைய சிவலிங்கம், திருமஞ்சனக் கிணற்றைக் கண்டுபிடித்து புதிய ஆலயம் ஒன்றை அமைத்தார்.

**பொதுப் பணிகள்**

- ✶ இந்து சாதனம் எனும் பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தியமை
- ✶ 1887 ல் விக்டோரியா வாசிகசாலையை அமைத்து அதிலே பொருளாளராகக் கடமையாற்றியமை.

**பிற பணிகள்**

- ✶ துண்டுப்பிரசுர முயற்சியை ஆற்றுப்படுத்தியவர்
- ✶ துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்
- ✶ வண்ணை வேதபராயண வகுப்புகளை நடாத்தியமை (12 புள்ளிகள்)

($8 + 12 = 20$ புள்ளிகள்)

08)

(i) **நாட்டார் கலையில் காவடி**

காவடி என்பதன் பொருள் விளக்கம் : - காவ + தடி எனும் இருபதங்கள் சேர்ந்து காவடி எனும் சொல் உருவானது.

**காவடி ஆட்டம் பற்றிய தோற்றப் பின்னணி**

- ✶ காவடி ஆட்டத்தின் தோற்றம் பூர்வீகமாக சுமை தூக்கும் செயற்பாட்டோடு இணைந்தது.
- ✶ தமது குழுவின் வேலைகளுக்காகச் சுமை தூக்குதல்
- ✶ எஜமான்களது தேவைக்காகச் சுமை தூக்குதல்
- ✶ நேர்த்திக்காகச் சுமை தூக்குதல்
- ✶ இடும்பனைப் போன்று காவடி எடுத்துச் சந்நிதிக்கு வருபவர்களுக்கு முருகன் அருள் கொடுப்பார்.

**காவடி அமைப்பு முறை**

- ✶ காவடி பெரும்பாலும் வில் விளைவு போன்று அமைக்கப்பட்டிருக்கும்.
- ✶ வில் வளைவின் இரண்டு பக்கங்களையும் தடியொன்று தொடர்புபடுத்தும்.
- ✶ காவடியின் இரு பக்கங்களும் மயில் இறகால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- ✶ அத்துடன் சலங்கையும் கட்டப்பட்டிருக்கும்.

**காவடி ஆட்டத்தின் வகைகள்**

- ✶ பாற்காவடி
- ✶ தானியக்காவடி
- ✶ புஸ்பக்காவடி
- ✶ பழக்காவடி
- ✶ பறவைக்காவடி

**அவற்றின் அமைப்பிற்கேற்ப மூன்று வகைப்படும்**

- ✶ ஆனந்தக் காவடி
- ✶ துலாக் காவடி
- ✶ முள்ளுக் காவடி

(ii) **வேதகால சமயநிலை**

இயற்கை சார்ந்த தெய்வங்களின் வழிபாடு, விண்ணுலகம், மண்ணலகம், இடையுலகம் சார்ந்த தெய்வங்கள் பற்றிய தெய்வீகச் சிந்தனைகள், கடவுட் கோட்பாட்டிற்கு அடிப்படையான கடவுள் நம்பிக்கை வளர்ச்சி, யக்ஞம், யாகம், உபாசனை முறைகள் பிரதானமானவை வேட்டல் அக்கினி வழிபாடு முக்கியத்துவம், மந்திரங்களை உச்சரித்தல் அவிப்பொருட்களை வழங்கி யக்ஞம் நிறைவேற்றுதல் பிராமணங்களில் வழிபாட்டு முறைகள், புரோகிதன் முக்கியத்துவம் அக்கினி வழிபாடு

உபாசனைகளில் 'ஓம்' என்னும் பிரணவத்தின் உபாசனை, சதருத்திரிய உபாசனை - பல நாமங்களைக் கூறி வழிபடுதல் காயத்திரி மந்திர உபாசனை இல்லற வாழ்வு தொடர்பான சடங்குகள் உபநயனம் அன்னப் பிரசன்னம், திருமணக் கிரியைகள் முக்கியத்துவ முடையன. வழிபாட்டு முறைகளின் நோக்கம் - பண்டமாற்று முறை - செல்வம், நீண்ட ஆயுள், மக்கட்பேறு என்பவற்றையும் நாட்டு நன்மையையும் அடிப்படையாகக் கொண்டது. சாம வேதங்களில் இசையுடன் வழிபாடு அதர்வவேதம் கூறும் சமூகநலன்சார் கிரியைகள்

(iii) **இலிங்கோற்பவ மூர்த்தம்**

சிவனது வடிவங்களில் ஒன்று. இலிங்கம் இடம்பெறும் தோற்றம், ஓடுகம் என்ற பொருள் உடையது. இதன் அமைவிடம் சிவாலயத்தில் கருவறையின் மேற்குப் புறத்தே உள்ள கோஷ்டத்தில் மேற்கு நோக்கியவாறு அமையும், விஷ்ணுவும் பிரமாவும் அடிமுடி தேடிய புராணக் கதையுடன் தொடர்புடையது. சிவன் ஒளி வடிவில் தோன்றி அகந்தை நீங்கி, அருள் புரிந்தமை பற்றிய விளக்கம்

இவ்வடிவத்தின் அமைப்பு பற்றிய விளக்கம் இம் மூர்த்தம் உணர்த்தும் தத்துவம் சிவனே முழுமுதற் பொருள், அகந்தையில் இறைவனை அடைய முடியாது என்பன விளக்கப்படல். (தத்துவம்)

திருமுறைப் பாடல்களில் தொடர்புபடுத்தப்பட்டமை பற்றிய விளக்கம்.

(iv) **பல்லவர்கால கட்டடக்கலை**

காலம் :- கி. பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 09 நூற்றாண்டு

சூழ்நிலை :- சமணம், பௌத்தம் என்பன தமது செல்வாக்கை இழந்து சைவம், வைணவம் என்பன வளர்ச்சி அடைந்த காலம். பக்தி இயக்கத்தின் ஊடாக இறை இருப்பை நிறுத்திய காலம்

குடைதளி :- மகேந்திரவர்மன் காலத்தில் குடைதளி அமைக்கப்பட்டது.
உ+ம்:- மண்டகப்பட்டு, மகேந்தரிவாடி, மாமண்டூர், பல்லாவரம், சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, தளவானூர்

மலைதளிகள் :- மாமல்லன் காலத்தில் மலைதளிக் கோவில்கள் அமைக்கப்பட்டமை.
உ+ம் :- மாமல்லபுரத்தில் உள்ள பஞ்சபாண்டவர் ரதம், (தர்மராஜரதம்) முக்கியம்

கட்டுத்தளி / கற்றளி :- இராஜசிம்மன் காலத்தில் கட்டுத்தளிக் கோவில்கள் அமைக்கப் பட்டன.
உ+ம் :- மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் சிறப்பானவை.

(இவ்வாலயங்களின் முக்கியத்தவங்கள் சில குறிப்பிடல் வேண்டும்.

(v) **சைவபரிபாலன சபை**

**அறிமுகம்**

சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்த நாவலரது வழியில் அவரது சிந்தனைகளையும் கொள்கைகளையும் சைவமரபைப் பேணிப் பாதுகாப்பதற்காக உருவாகியதே சைவபரிபாலன சபையாகும்.

இது 1888ம் ஆண்டு 10ம் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சைவசமய பரிபாலன சபை 1892.09.17 இல் சைவபரிபாலன சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**சபை நிறுவப்பட்டதன் நோக்கம்**

✶ சைவத்தின் வளர்ச்சிக்கும் பிரசாரத்திற்கும் ஊக்கமளிப்பது.

✶ சைவக் கோவில்களைத் தாபித்தல். பழுதுபார்தத்ல், திருத்தி அமைத்தல், கோயில்களைப் பொறுப்பேற்று நடத்துதல்.

✶ சைவப் பிள்ளைகளுக்கான நூல்களைப் பிரசுரித்தல்.

**பணிகள்**

✶ இந்துசாதனம் எனும் பத்திரிகையை தமிழில் வெளியிட்டது.

✶ ஆங்கிலததில் *Hindu orgam* என்ற பெயரில் வெளியிட்டது.

✶ வருடந்தோறும் தமிழக அறிஞர்களும் எமது சாட்டு அறிஞர்களும் பங்கு கொள்ளும் சைவமாநாட்டை நடாத்தல்

✶ இச்சபை நாவலரதும், அவரது பரம்பரையினதும் சமய நால்களையும் மறுபிரசாரம் செய்தல்

✶ பாடசாலை மாணவரிடையே பரீட்சை நடாத்தி சைவமாநாட்டின் போது பரிசில்களை வழங்கி ஊக்கமளித்தல்.

($5 \times 4 = 20$ புள்ளிகள்)